**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 121/2015**

**வழக்கு சாட்சி: DW.1**

**தேதி: 11.08.2025**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **திரு.ஆறுமுகம் என்ற தேவா** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**எதிரிகள் 1, 3 முதல் 6 ஆஜர். எதிரி 2 ஆஜர் இல்லை. மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் சிவகங்கை அண்ணாமலை நகரில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது கொத்தனார் வேலை செய்கிறேன். இதற்கு முன்பு கொத்தனாருக்கு உதவியாளராக வேலை செய்தேன். நான் முனியாண்டி என்ற மேஸ்திரியிடம் வேலை பார்த்தேன். என்னை முனியாண்டி மேஸ்திரி சுமார் 12 வருடங்களுக்கு முன்பு சித்தலூர் 1வது எதிரி மகாதேவன் வீட்டிற்கு வேலைக்கு செல்லுமாறு கூறினார். நானும் செல்வி என்ற சித்தாலும் வேலைக்கு போனோம். நாங்கள் பழைய கேட்டை பிரித்து ஓரமாக மண்ணில் தூக்கி வைத்திருந்தோம். அதன்பிறகு நாங்கள் எங்கள் வேலையை பார்த்தோம். அங்கிருந்து சுமோவில் மொத்தம் 4 பேர் வந்தார்கள். அவர்களில் இரண்டு பேர் ஆண்கள், இரண்டு பேர் பெண்கள். அவர்கள் இறங்கி வந்தார்கள். அவர்கள் மகாதேவன் வீட்டில் வேலை பார்ப்பதை பார்த்து சண்டை போட்டார்கள். அதன்பிறகு அவர்களுக்குள்ளே தள்ளு, முள்ளு ஆகிவிட்டது. அப்படி தள்ளிய போது அந்த அம்மா கேட்டில் விழுந்து விட்டார். பிறகு அவர்களே அந்த அம்மாவை அதே சுமோவில் தூக்கி கொண்டு போய் விட்டார்கள். அதன்பிறகு நான் வேலையை பார்க்காமல் நிறுத்திவிட்டு வந்துவிட்டேன். என்னுடைய அசல் ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பீடு பார்க்கப்பட்ட நகல் **எசாஆ.1**.

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.08.11 19:21:04 +0530

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

நான் எத்தனை வருடமாக கொத்தனார் வேலை செய்கிறேன் என்றால் 1996ல் இருந்து கொத்தனார் வேலை செய்கிறேன். கொத்தனார்களுக்கு என்று சங்கம் இருக்கிறது என்றால் சரிதான். அதில் நான் உறுப்பினராக இருக்கிறேனா என்றால் இல்லை. பொதுவாக கொத்தனார்கள் அந்த சங்கத்தில் உறுப்பினர்களா இருப்பார்கள் என்றால் சரிதான், ஆனால் 15 பேர் தான் சங்கத்தில் இருக்கிறார்கள். நான் என்னை விசாரிக்க வேண்டும் என்று கொடுத்த மனுவில் ஆறுமுகம் என்ற தேவா என்று உள்ளது என்றால் சரிதான். எ.சாஆ.1 ல் என் பெயர் ஆறுமுகம் என்று உள்ளது என்றால் சரிதான். நான்7ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். எசாஆ.1 ஆதார் கார்டில் என்னுடைய பிறந்த தேதி 02.03.1984 என்று உள்ளது என்றால் சரிதான். ஆதார் கார்டில் உள்ள என்னுடைய பிறந்த தேதியின் படி 1996ம் ஆண்டு எனக்கு 12 வயது தான் ஆகிறது என்றால் சரிதான், ஆதாரில் என் பிறந்த தேதி தவறாக போடப்பட்டுள்ளது. 12வயதில் கொத்தனார் வேலை பார்க்கவே முடியாது என்றால் சரியல்ல. நான் சித்தலூரில் 1வது எதிரி மகாதேவன் வீட்டிற்கு வேலைக்கு போனதாக சொன்னேன் என்றும், எந்த தேதி, மாதம், வருடத்தில் வேலைக்கு போனேன் என்று ஞாபகம் இருக்கிறதா என்றால் இல்லை. சித்தலூர் சிவகங்கையிலிருந்து 20 கி.மீ இருக்குமா என்றால் 15 கி.மீ. கேட்டை மண்ணில் ஊன்றி சுவற்றில் சாய்த்து வைத்திருந்தோமா என்றால் மண்ணில் படுக்க போட்டு வைத்திருந்தோம். மண்ணில் படுக்க போட்டு வைத்திருக்கும் கேட்டில் யார் விழுந்தாலும் குத்துவதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சித்தலூரில் மொத்தம் எத்தனை தெருக்கள், வீடுகள் இருக்கிறது தெரியுமா என்றால் தெரியாது. நான் வேலை பார்த்த மகாதேவன் வீடு எந்த திசை நோக்கி வாசல் இருக்கிறது என்றால் வடக்கு பார்த்து வாசல். நான் போலீசில் புகார் கொடுத்தேனா போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் அந்த ஊர் வி.ஏ.ஓ, தலையாரி வேறு யாரிடமாவது இந்த சம்பவம் குறித்து சொன்னேனா என்றால் சொல்லவில்லை. நான் எதிரி மகாதேவன் கொண்டதற்கிணங்க சாட்சி சொல்ல வந்தேன் என்றால் அவர் யார் என்றே தெரியாது. எனக்கு இந்த நீதிமன்றத்தில் இந்த வழக்கு நடக்கிறது என்று யார் சொன்னார்கள் என்றால் மகாதேவன் சொன்னார். நான் கொத்தனார் வேலையே பார்க்கவில்லை என்றும்

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.08.11 19:21:15 +0530

சித்தலூருக்கு மகாதேவன் வீட்டிற்கு வேலைக்கு போகவில்லை என்றும் மகாதேவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை: இல்லை.**

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.08.11 19:21:23 +0530

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.08.11 19:21:33 +0530